**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 63/2019 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | குப்பையாண்டி | CASTE | : | |
| S/O | ராமசாமி | RELIGION | : | இந்து |
| VILLAGE | சின்னஇலந்தைக்குளம் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 53 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.02.2026**

**குறுக்கு விசாரணை**

1. எனது நிரூபண வாக்குமூலத்தையும், பிராதையும் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன், அதில் உள்ள விவரங்கள் எனக்குத்தெரியும். எனது பிராதிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் வழக்குச்சொத்தில் கட்டிடம் உள்ளதாக எந்தப்பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன், எந்தப்பத்தியில் என்று ஞாபகமில்லை. வழக்குச்சொத்தை நீதிமன்ற ஆணையர் அளந்த சமயத்தில் கட்டிடம் துார்ந்து விட்டது. நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தை பார்வையிட்டபோது அது சமதளமாக இருந்தது என்றால் அளப்பதற்காக சமப்படுத்தி வைத்திருந்தேன்.

2. நீதிமன்ற ஆணையர் சொத்தை எப்போது பார்வையிட்டார்கள் என்று ஞாபகமில்லை. வா.சா.ஆ.12 சொத்துவரி ரசீதுகள் 2024–2025, 2025–2026 க்கான ரசீதுகள் உள்ளன என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர சின்னஇலந்தைக்குளத்தில் எனக்கு வேறு வீடு உள்ளது. சொத்துவரி ரசீது வருடத்திற்கு ஒரு ரசீதுதான் போடப்படும். ஒரே வருடத்தில் 2 ரசீதுகள் போட்டால் அது செல்லாது என்றால் சரியல்ல, வழக்குச்சொத்திற்கு ஒரு ரசீதும், எனது வீட்டிற்கு ஒரு ரசீதும் தாக்கல் செய்துள்ளேன்.

3. வழக்குச்சொத்து மற்றும் எனது வீட்டின் கதவு எண், வார்டு எண் எனக்குத்தெரியாது. நான் குடியிருக்கும் வீடு காரைவீடு, அந்த வீட்டிற்கான வரித்தொகை எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.12 ரசீதுகள் வழக்கிற்கு சம்பந்தமில்லாதவை என்றாலும் வழக்கை திசை திருப்ப தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்குச்சொத்திற்கு நீதிமன்றக்கட்டணம் எவ்வளவு என்று

எனக்குத்தெரியாது. எனது பிராதில் வழக்குச்சொத்தில் இருந்ததாக சொல்லும் கூரை வீட்டின் மதிப்பு என்ன என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4. வழக்குச்சொத்திலிருந்த கூரை வீட்டின் மதிப்பு எனக்குத்தெரியாது. வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.